**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

05.03.2026

L.A.O.P. No. 22/2024

R.W. 1 திரு. நெல்சன் பாபு

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (தெற்கு ரயில்வே தரப்பில்) : -**

நில எடுப்பு சம்பந்தமாக அந்த நிலத்திற்கான மதிப்பு நிர்ணயிப்பது மாநில அரசாங்கம்தான் என்றாலும் தெற்கு ரயில்வே க்கு அதில் எந்த பங்கும் கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு நிர்ணயிக்கப்படும் மதிப்பை தெற்கு ரயில்வே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

எந்தவிதமான அதிகப்படியான இழப்பீடோ, நிவாரணமோ எனக்கு கிடைக்க வேண்டும் என்றால் நான் நில எடுப்பு அதிகாரிகளைதான் அணுக வேண்டும் என்றாலும் தெற்கு ரயில்வேவிற்கும், அதற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. அந்த அதிகாரிகளிடம் கேட்டு அவர்கள் தராததால்தான் நான் நீதிமன்றம் வந்துள்ளேன்.

நிலமெடுப்பு அதிகாரி எடுக்கப்படும் நிலத்தின் தன்மையை பொறுத்து சரியான சட்ட விதிகளை பின்பற்றி சரியான முறையில் இழப்பீடு நிர்ணயித்து வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல.